# சிலப்பதிகாரப் பாடல்களில் காணலாகும் அணிவகைகளில் அளபெடை

ப. ராஜலெட்சுமி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 625018.

முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி
உதவிப் பேராசிரியர், நெறியாளர், தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 625 018.

**ஆய்வுச்சுருக்கம்**

அணி இலக்கணம் எல்லா மொழிகளுக்கும் பொதுவானது ஆகும். செய்யுளுக்கு அழகு சேர்ப்பது அணியாகும். அச்செய்யுள் பாடல்களைச் சுவையுணர்ந்து படிக்கவும், சுவை அமையப் படைக்கவும், கற்போர் விரைந்து புரிந்து கொள்ளவும் அணி இலக்கணம் இயற்றப்பட்டுள்ளது. கவிஞர்களின் கற்பனையில் ஒரு கூறாகத் தோன்றி விளக்கி நிற்கும் பொருள்களில் உவமை, உருவகம் முதலிய பல அணிகள் எடுத்துரைக்கப்படுகின்றன. இலக்கிய வகைகளுள் காப்பியம் என்பது மிக முக்கியப் பிரிவாகும். இக்காப்பியம் தொடர் நிலைச் செய்யுளால் அமைவதாகும். இவற்றுள் இரட்டைக் காப்பியம் என்று சிறப்புப் பெயர் பெற்றவை சிலப்பதிகாரம் ஆகும். இச்சிலப்பதிகாரத்தில் பயின்று வரும் பாடல்களில் உள்ள பொருள் அணியின் வகைகளில் காணப்படும் அளபெடைச் சொற்களின் மூலம் வெளிப்படும் பயன்பாடுகள் என்னென்ன என்று ஒப்பிட்டு விடைகாணும் முகமாக இவ் ஆய்வுச்சுருக்கம் விரிகின்றது.

**கலைச்சொற்கள்:** அணி இலக்கணம், அளபெடை, காப்பியம், ஒப்புமை நயம், கற்பனை வளம், சொல்லழகு, பொருளழகு, அலங்காரம், உத்தி முறை.

## முன்னுரை

அணி என்பது இலக்கியத்திற்கு மெருகூட்டிச் சிறப்புச் சேர்ப்பவையாகும். செய்யுளின் அழகையும், பண்பையும், நயத்தையும் நுட்பமாக ஆராய்ந்து அழகுற வெளிப்படுத்திக் காட்டுவது அணியாகும். பொருள் விளக்கத்தின் தொடக்கத்தில் எழுந்த அணிகளைப் பின்பு செய்யுளை அழகுபடுத்தும் முயற்சியின் விளைவாகத் தோன்றியதே அணியிலக்கணம் ஆகும். பொதுவாகச் செய்யுளில் வரும் அணிகள் வெறும் அலங்காரமாக மட்டும் பயன்படுத்தப்படாமல் கவிஞனின் நோக்கம் நிறைவேற்றத்திற்காகவும் அவற்றின் கற்பனை வளத்தைச் சிறக்கச் செய்து செய்யுளைச் சிறப்புடையனவாக ஆக்குகின்றன. தமிழ் மொழியில் தோன்றிய பெருங்காப்பியத்தில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் பரவலாகக் கிடைக்கும் பொருள் அணியின் வகைகள் தொடர்பான பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள அளபெடைச் சொற்களின் பயன்கள் குறித்து ஆராய்வதாக இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

## அணிவிளக்கம்

அணி என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள் ஆகும். அச்சொல்லாலும், பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணி இலக்கணத்தின் இயல்பாகும். செய்யுளில் சொல்லழகு, பொருளழகு இரண்டும் கூடி இருக்கும் போது தான் படிப்போருக்குச் செய்யுளைப் படிக்க வேண்டும் என்ற வேட்கை ஏற்படுகிறது. எனவே புலவன் அச்செய்யுளில் தான் கூறவந்த கருத்தை அழகுறச் சொல்வதற்காகப் பயன்படுத்தும் உத்தி முறை தான் அணி இலக்கணம் எனப்படுகிறது. வடமொழியில் அணியை அலங்காரம்

என்று அழைக்கப்படுகின்றது. “கவிதைக்கு உயிர்ப் பொருளாக அமைந்தாலும் கூட அதன் உணர்வை வெளிக்காட்ட உதவுவது அணியாகும்”[1] என்று ச.வே. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

### அளபெடை விளக்கம்

அளபெடை என்பது எழுத்தின் ஒலிக்கு மாத்திரை கூட்டுதல் ஆகும். எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்புக்களைக் கொண்டு ஓசைப்புலப்பட இயற்றப்படுவது செய்யுளாகும். அச்செய்யுளில் ஒலி (ஓசை) குறையும் இடங்களும் உண்டு. அவ்வாறு குறைந்த இடங்களில் ஒலியை (ஓசை) ஈடுசெய்யும் பொருட்டு அச்சொற் களில் உள்ள நெடில் எழுத்துக்களின் இனமான குறில் எழுத்துக்களைச் சேர்த்தனர். இதனை இலக்கண நூலார் அளபெடை என்னும் பெயரால் அழைக்கப்பட்டுள்ளார். ஓர் எழுத்து இரண்டு மாத்திரைகளுக்கு மேலும் நீண்டு ஒலித்தலே அளபெடை எனப் படுகிறது. சார்பெழுத்துக்களுள் ஒன்றான இவ் அளபெடை இரண்டு வகைப்படும். அவை உயிரளபெடை, ஒற்றளபெடை என்பனவா கும். அவற்றுள் உயிரளபெடையானது செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்னும் மூன்று வகைப்பாட்டிற்குள் இருப்பதை அறிய முடிகிறது.

### தண்டியலங்காரம்

தொல்காப்பியத்தை அடுத்து அணி இலக்கணம் பயிலப் பெரிதும் பயன்படுவது தண்டியலங்காரம் ஆகும். இந்நூல் தண்டி என்பவரால் இயற்றப்பட்டது. இது தொல் காப்பிய உவமயியல் கருத்துக்களையும் வட மொழித் தாக்கத்தையும் கொண்டு அமைந்து ள்ளது. இந்நூல் பொதுவணியியல், பொருளணயியல், சொல்லணியியல் என மூன்று பிரிவுகளை உடையது. இவற்றுள் பொதுவணியில் செய்யுள் வகைகளையும், செய்யுள் நெறிகளையும் பற்றி விவரிக்கின்றது. பொருள் அணியில் தன்மை அணி முதல் பாவிக அணி வரையில் உள்ள முப்பத்தை ந்து பொருள் அணிகளை விளக்குகின்றது. சொல்லணியியலில் மடக்கு அணி, சித்திரக் கவி என்னும் இரண்டு அணிகளை யும் வழு, மலைவு பற்றிய கருத்துக்களையும் எடுத்து உரைக்கின்றன. ஒவ்வொரு அணி வகைக்கும் தெளிவான விளக்கமும், பொருத்தமானப் பாடல் சான்றும், அப்பாடலுக்குரிய பொருளும், அணிபொருத்தமும் இடம் பெற்றுள்ளது. எனவே பிற்கால அணி இலக்கண நூல்களுள் சிறந்து விளங்குவது தண்டியலங்காரம் ஆகும்.

### சிலப்பதிகாரம்

தமிழ் மொழியில் தோன்றிய ஐம்பெருங் காப்பியங்களுள் சிறப்புத் தகுதி வாய்ந்தவை சிலப்பதிகாரம் ஆகும். இச்சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டவை ஆகும். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டுவதும் என்ற மூன்று உண்மை களையும் சமணசமயச் செய்திகளையும் சிலப்பதிகாரம் கூறுகின்றன. காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து குலவொழுக்கத்தின் படி திருமணம் செய்து இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றை புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று காண்டங்களையும் முப்பது காதை களாகக் கொண்டு நிலைமண்டில ஆசிரியப் பாவால் சிலப்பதிகாரம் பாடப்பட்டுள்ளது.

### தன்மை அணியில் அளபெடை

தன்மை என்பதற்கு இயற்கை (இயல்பு) என்பது பொருளாகும். ஒரு பொருளின் இயல்புத் தன்மையை நேரில் கண்டாற் போல உள்ளபடி விளக்குவது தன்மை அணியாகும்.

### தன்மை அணியின் இலக்கணம்

எவ்வகைப்பட்ட பொருளாக இருப்பினும் அதன் உண்மைத்தன்மையை விளக்குவதற்கு ஏற்ற சொற்களைக் கொண்டு உரைப்பது தன்மை அணியாகும். இதனை,

**“எவ்வகைப் பொருளும் மெய்வகை**
**விளக்கும்**

**சொன்முறை தொடுப்பது தன்மை ஆகும்”[2]**
(தண்டி.,பொருள்.நூ.27) பக்-39.

என்ற நூற்பா மூலம் அறிய முடிகிறது.

கண்ணகி அழகிய அணிகளை அணிந்து கொண்டு மணப்பெண் கோலத்தில் யானையின் மேல் அமர்ந்து இருக்கச் செய்து பிற மகளிருடன் புகார் நகரெங்கும் அறியுமாறு அழைத்து வந்து திருமணம் செய்தனர். இதனை,

**“யானை எருத்தத்து, அணி இழையார் மேல்**
**இரீஇ”[3]** (சிலம்பு.,மங்கல.,பா.43) பக்-26.

(எ.கா) இரீஇ - இருக்கச் செய்து

*என்ற பாடல் அடியில் 'இரீஇ' என்னும் சொல் 'இருக்கச்செய்து' என்ற பொருளில் தன்மை அணியாக இடம் பெற்றுள்ளதால் யானையின் மேல் அமர்ந்து இருக்கச் செய்த அழகின் அளவை மிகுதிப்படுத்திக் காட்டு வதற்காக 'இரீ' என்னும் பெயர்ச்சொல் வினை எச்சமாக மாற்றம் அடைந்து 'இரீஇ' என்ற அளபெடுத்து சொல்லிசை அளபெடை யாக வந்துள்ளது. எனவே இங்கு திருமணத் தில் மணப்பெண்ணை எப்படி அழைத்து வந்து அறிமுகம் செய்ய வேண்டும் என்பதை இப்பாடல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.*

**அணிப்பொருத்தம்**

*கண்ணகி என்ற பொருளில் உருவத்தில் பல விதமான தோற்ற இயல்புகளை நேரில் பார்ப்பது போல உள்ளவாறு கூறியிருப் பதால் இப்பாடல் தன்மை அணி எனப்படுகின்றது.*

**தீவக அணியில் அளபெடை**

*தீவகம் என்னும் வடசொல்லுக்கு 'விளக்கு' என்பது பொருளாகும். ஓரிடத்தில் வைக்கப் பட்ட விளக்கு பல இடங்களுக்குச் சென்று வெளிச்சம் காட்டுவது தீவகவணி எனப் படுகின்றது.*

**தீவக அணியின் இலக்கணம்**

*ஒரு குணத்தையோ, தொழிலையோ, இனத்தையோ, பொருளையோ குறிக்கும் ஒரு சொல் செய்யுளின் ஓர் இடத்தில் நின்ற சொல் பலஇடங்களிலும் சென்று பொருளை விளக்குவதால் இது தீவக அணியாகும். இதனை,*

**"குணம் தொழில் சாதிபொருள் குறித்துஒருசொல்**

**ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்**

**தீவகம் செய்யுள் மூவிடத்து இயலும்"[4]**

*(தண்டி.,பொருள்.நூ.38) பக்-86.*

*என்ற நூற்பா மூலம் அறியலாம்.*

*நிலைப்பெற்ற விளக்கு தோரணங்களும், பசும் பொன்னால் செய்த பூரண கும்ப விளக்குகளும் வீதி எங்கும் பரவி பொலிவு டன் காட்சியளிக்கிறது. இதனை,*

**"தோரணம் நிலைஇய தோம்அறு பசும்பொன்"[5]** *(சிலம்பு., இந்திர.,பா.152) பக்-72.*

*(எ.கா) நிலைஇய–நிலைப்பெற்று*

*என்ற பாடல் அடியில் 'நிலைஇய' என்னும் சொல் 'நிலைபெற்று' என்ற பொருளில் தீவக அணியாக இடம்பெற்றுள்ளதால் விளக்கு தோரணங்கள் நிலைபெற்று இருந்த அளவை அதிகப்படுத்திக் காட்டுவதற்காக 'நிலை' என்னும் பெயர்ச்சொல் வினை எச்சமாக மாற்றம் அடைந்து 'நிலைஇய' என்று அளபெடுத்து சொல்லிசைஅளபெடையாக வந்துள்ளது. எனவே ஓர் ஊரில் விழா நடைபெறும் போது விளக்கு தோரணங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டு இருக்கும் என்பதை இப்பாடல் வழி அறிந்து கொள்ள முடிகிறது.*

**அணிப்பொருத்தம்**

*இப்பாடலில் தோரணவிளக்கு, பூரண விளக்கு இரண்டும் பல இடங்களுக்குச் சென்று வெளிச்சம் காட்டுவதால் இது தீவக அணியாகும்.*

**பின்வருநிலை அணியில் அளபெடை**

*ஒரு செய்யுளில் முன்னர் வந்த ஒரு சொல்லோ, பொருளோ பின்னர்ப் பல இடங்களில் வருமாயின் அது பின்வருநிலை அணியாகும்.*

**பின்வருநிலை அணியின் இலக்கணம்**

*ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லே மீண்டும் பல இடங்களில் வருதல், முன்னர் வந்த பொருளே மீண்டும் பல இடங்களில் வருதல் பின்வருநிலை அணியாகும். இதனை,*

**"முன்வரும் சொல்லும் பொருளும் பலவயின்**

**பின்வரும் என்னில் பின்வருநிலையே"[6]**

*(தண்டி.,பொருள்.நூ.40) பக்-95.*

*என்ற நூற்பா மூலம் அறியமுடிகிறது.*

*அரசியின் வருகையை நரைமுடி கலந்த நல்ல கூந்தலையுடைய முதுமகளிர் பலரும் கடல் சூழ்ந்த இவ்வையகத்தைக் காக்கும் நம் பாண்டிய மன்னனின் கோப்பெருந்தேவி வாழ்க என உள்ளன்புடன் வாழ்த்தி வந்தனர். இதனை,*

**"நரை விரைஇய நறுங் கூந்தலர்**

**ஊரை விரைஇய பலர் வாழ்த்திட"[7]**

*(சிலம்பு.,வழக்கு.,பா.17) பக்-274.*

*(எ.கா) விரைஇய - கலந்த*

*என்ற பாடல் அடியில் 'விரைஇய' என்னும் சொல் 'கலந்த' என்ற பொருளில் பின்வரு நிலை அணியாக அமைந்துள்ளதால் நரைமுடி கலந்த அளவை அதிகப்படுத்திக் காட்டுவதற் காக 'விரை' என்னும் பெயர்ச்சொல் வினை*

எச்சமாக மாற்றம் அடைந்து 'விரைஇய' என்று அளபெடுத்து சொல்லிசைஅளபெடை யாக வந்துள்ளது. இங்கு நல்ல உள்ளம் கொண்ட நரைமுடி கலந்த கூந்தலையுடைய வர்கள் அன்புடன் வாழ்த்தினார்கள் என்பதை இப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

### அணிப்பொருத்தம்

இப்பாடலில் முதலில் வந்த 'விரைஇய' என்ற சொல் மீண்டும் அடுத்தப் பாடல் அடியில் வந்ததால் இது சொற்பின்வருநிலை அணி எனப்படுகின்றது.

### முன்னவிலக்க அணியில் அளபெடை

முன்னம் என்பதற்குக் குறிப்பு என்பது பொருளாகும். ஒரு பொருளைக் குறிப்பால் மறுத்து மேன்மை தோன்றச் சொல்லுவது முன்னவிலக்க அணியாகும்.

### முன்னவிலக்க அணியின் இலக்கணம்

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலப் பொருள்களையும் குறிப்பினால் மறுப்பது அல்லாமல் கூற்றினால் வெளிப்படையாக மறுப்பதும் முன்னவிலக்க அணி ஆகும். இதனை,

**"முன்னத்தின் மறுப்பின் அது முன்னவிலக்கே**

**மூவகைக் காலமும் மேவியதாகும்"[8]**

*(தண்டி.,பொருள்.நூ.41) பக்-98.*

என்ற நூற்பா வழி அறியலாம்.

என் கணவர் என் கையைப் பற்றி எங்கோ அழைத்துச் சென்றார் இறுதியில் ஒரு பெரிய நகரத்தை அடைந்தோம.; அங்கே அவன் பழிச் சொல்லுக்கு ஆளானான். அப்பழிச் சொல் தேளைத் தூக்கி போட்டது போல் இருந்தது. அதனால் என் கணவருக்கு தீங்கு நேரிட்டது. என்று பலர் சொல்லக்கேட்டேன் அதைக் கேள்வியுற்ற நான் அரசன் முன் சென்று வழக்குரைத்தேன் அதனால் அவ்வரசர்க்கும் அவ்வூர்க்கும் தீங்கு நேர்ந்தது. என் கையால் அந்தத் தீங்கு மிகவும் கொடியதாக இருந்தது என்று கண்ணகி கனவில் கண்டதைக் கூறுகின்றாள். இதனை,

**"தீக்குற்றம் போலும் செறிதொடீஇ தீக்குற்றம்"[9]** *(சிலம்பு.,கனாத்திறம்.,பா.52) பக்-132.*

(எ.கா) தொடீஇ - வளையல் அணிந்த கை

என்ற பாடல் அடியில் 'தொடீஇ' என்னும் சொல் 'வளையல் அணிந்த கை' என்ற பொருளில் முன்னவிலக்க அணியாக இடம்பெற்றுள்ளதால் கை நிறைய வளையல் அணிந்து இருந்த அளவை மிகுதிப்படுத்திக் காட்டுவதற்காக 'தொடீ' என்னும் பெயர்ச் சொல் வினை எச்சமாக மாற்றம் அடைந்து 'தொடீஇ' என்று அளபெடுத்து சொல்லினை அளபெடையாக வந்துள்ளது. இங்கு தன் கையால் குற்றம் நடைபெற போகிறது என்று முன்பே கனவில் தோன்றியதை இப்பாடல் வழி அறிய முடிகிறது.

### அணிப்பொருத்தம்

இப்பாடலில் அரசருக்கும், அவ்வூருக்கும் என் கையால் தீங்கு நடக்கப் போகின்றது என்று முன்னரே கண்ணகி கனவில் தோன்றி குறிப்பாக விலக்கப்படுதலின் இப்பாடல் முன்னவிலக்க அணியாகும்.

### வேற்றுப்பொருள் வைப்பு அணியில் அளபெடை

முதலில் ஒரு பொருளினது திறத்தைத் தொடங்கிய கவிஞர் பின்னர் அதனைச் சிறப்பாக முடிப்பதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த உலகறிந்த வேறு ஒரு பொருளை ஏற்றி வைத்துச் சொல்வது வேற்றுப்பொருள் வைப்பு அணியாகும்.

### வேற்றுப்பொருள் வைப்பு அணியின் இலக்கணம்

கவிஞர் முன்னர்க் கூறும் ஒரு பொருளைச் சிறப்புப் பொருள் என்றும் பின்னர் அதனை முடிப்பதற்கு அவர் கூறும் உலகறிந்த வலிமையான பொருளைப் பொதுப்பொருள் என்றும் குறிப்பிட்டுள்ளார். சிறப்புப் பொருளைப் பொதுப் பொருள் கொண்டு முடித்தல் வேற்றுப்பொருள் வைப்பு அணி எனப்படுகின்றது. இதனை,

**"முன்ஒன்று தொடங்கி மற்றுஅது முடித்தற்குப்**

**பின் ஒருபொருளை உலகுஅறி பெற்றி**

**ஏற்றிவைத்து உரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே"[10]** *(தண்டி.,பொருள்.நூ.45) பக்-110.*

என்ற நூற்பா மூலம் அறியலாம்

பெரும் பரப்பினையுடைய நிலமகளை சூரியனின் மறைந்த இருள் பெரும் போர்வையாக அவள் உடம்பை மறைத்து நின்ற துன்பமாக இருந்தது. அத்துன்பத்தை நீக்கியவனாக மலை உச்சியின் மீது சூரியன் உதித்தான். இதனை,

**"புதையிருட் படாஅம் போக நீக்கி"[11]**

*(சிலம்பு.,இந்திர.,பா.4) பக்-61.*

*(எ.கா) படாஅம் - மறைத்தல்*

*என்ற பாடல் அடியில் 'படாஅம்' என்னும் சொல் 'மறைத்தல்' என்ற பொருளில் வேற்றுப்பொருள் வைப்பு அணியாக இடம்பெற்றுள்ளதால் இருளாகிய துன்பம் உடம்பை மறைத்த அளவை மிகுதிப்படுத்திக் காட்டுவதற்காக 'படா' என்ற சொல் ஓரசைச்சீராக இவ்விடத்தில் அமையாமல் 'படாஅம்' என்று ஈரசைச்சீராக அளபெடுத்து செய்யுளிசைஅளபெடையாக வந்துள்ளது. ஆகவே ஒரு மனிதனுக்கு துன்பம் வரும் போகும் என்பதை இப்பாடல் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.*

### அணிப்பொருத்தம்

*இப்பாடலில் ஒருவனுக்கு துன்பம் வரும் போகும் என்பது சிறப்புப் பொருள் என்றும் பின்னர் அதனை முடிப்பதற்கு சூரியன் தோன்றி மறைவது என்ற பொதுப் பொருளைக் கொண்டு முடித்தல் வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும்.*

### விபாவனை அணியில் அளபெடை

*விபாவனை என்பதற்கு சிறப்பாக எண்ணுதல் என்று பொருள் அப்பொருள் ஒன்றன் வினையைக் குறிப்பிடுகின்ற பொழுது அதற்குப் பலரால் அறியப்படும் காரண த்தைக் கூறாமல் பிறிதொரு காரணத்தைக் குறிப்பாக புலப்படும்படி இயல்பாக உரைப்பது விபாவனை அணியாகும்.*

### விபாவனை அணியின் இலக்கணம்

*ஒரு பொருளின் செயலைக் கூறும்போது அச்செயலுக்குப் பலரும் அறியவரும் காரண த்தை நீக்கி வேறொரு காரணத்தால் அது நிகழ்ந்தது என்றோ அல்லது காரணம் ஏதுமின்றி இயல்பாக நிகழ்ந்தது என்றோ உய்த்துணர்ந்து கொள்ளுமாறு குறிப்பாகக் கூறுவது விபாவனை அணி எனப்படுகின்றது. இதனை,*

**"உலகுஅறி காரணம் ஒழித்து ஒன்று உரைப்புழி**

**வேறுஒரு காரணம் இயல்பு குறிப்பின்**

**வெளிப்ப உரைப்பது விபாவனை ஆகும்"**[12]

*(தண்டி.,பொருள்.,நூ.49) பக்-122.*

*என்ற நூற்பா வழி அறியலாம்*

*பாண்டியனின் செங்கோல் வளையவும், கோவலனும் தரையில் விழுந்தான் இவற்றிற்கு எல்லாம் காரணம் அவன் பழம்பிறப்பில் செய்த தீவினை இப்பிறப்பில் அவன் வாழ் வினைப் பழிதீர்த்துக் கொண்டது. இதனை,*

**"காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்"**[13]

*(சிலம்பு.,கொலை.,பா.216) பக்-247.*

*(எ.கா) வளைஇய - வளைந்தது*

*என்ற பாடல் அடியில் 'வளைஇய' என்னும் சொல் 'வளைந்தது' என்ற பொருளில் விபாவனை அணியாக இடம்பெற்றுள்ள தால் பாண்டியனின் செங்கோல் வளைந்த அளவை அதிகப்படுத்திக் காட்டுவதற்காக 'வளை' என்னும் பெயர்ச்சொல் வினை எச்சமாக மாற்றம் அடைந்து 'வளைஇய' என்று அளபெடுத்து சொல்லிசை அளபெடை யாக வந்துள்ளது. இங்கு நல்ல செயல்களை நாடிச்செய்து இருந்தால் கேடு வருவது இல்லை என்பதை இப்பாடல் வழி அறிய முடிகிறது.*

### அணிப்பொருத்தம்

*இப்பாடலில் கோவலன் வெட்டுப்பட்டு தரையில் வீழ்ந்தான் என்பது பலரால் உலகு அறிந்த காரணம் ஆகும். ஆனால் இக்காரணம் இல்லாமல் இவ்வினைகள் எல்லாம் அவன் பழைய ஊழ்வினையானது பழிதீர்த்துக் கொண்டது என்பதைக் குறிப்பாக உணர்த்தியதால் இப்பாடல் விபாவனை அணி எனப்படுகின்றது.*

### ஒட்டு அணியில் அளபெடை

*கவிஞர் தான் கூறக் கருதிய ஒன்றை நேரே கூறாமல் விடுத்து அதனை ஒப்புமை உடைய வேறு பொருளோடு குறிப்பாக ஒட்டிக் கூறுவதால் ஒட்டு அணியாகும்.*

### ஒட்டு அணியின் இலக்கணம்

*கவிஞர் தாம் கூறக் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்துவதற்கு அதனோடு ஒத்த வேறு ஒரு பொருளை உரைப்பது ஒட்டு அணி எனப்படுகின்றது. இதனை,*

**"கருதிய பொருள் தொகுத்து அதுபுலப் படுத்தற்கு**

**ஒத்ததுஒன்று உரைப்பின் அஃது ஒட்டுஎன மொழிப"**[14] *(தண்டி.,பொருள்.,நூ.50) பக்-126.*

*என்ற நூற்பா மூலம் அறியலாம்*

*வயல்வெளிகளிலே மலர்ந்துள்ள நீர்ப்பூக்களில் நிறைந்துள்ள தேனை உண்டு மகிழ்ந்து இருந்த வண்டுகள் பின்னர் ஒளிபொருந்திய முகம் கொண்ட மகளிரின் சுரண்ட*

கூந்தலில் உள்ள நறுமணப் பூக்களின் குறைவான தேனை நுகர்ந்திட வண்டுகள் சுழன்று திரிகின்றன. இதனை,

"வயற்பூ வாசம் அளைஇ அயற்பூ"[15]

(சிலம்பு.,மனையறம்.,பா.16) பக்-30.

(எ.கா) அளைஇ - அலர்ந்தன (மலர்தல்)

என்ற பாடல் அடியில் 'அளைஇ' என்னும் சொல் 'அலர்ந்தன' என்ற பொருளில் ஒட்டு அணியாக இடம்பெற்றுள்ளதால் வயல்வெளி நீர்ப்பூக்கள் மலர்ந்துள்ள அளவை அதிகப் படுத்திக் காட்டுவதற்காக 'அளை' என்னும் பெயர்ச்சொல் வினை எச்சமாக மாற்றம் அடைந்து 'அளைஇ' என்று அளபெடுத்து சொல்லிசை அளபெடையாக வந்துள்ளது. இங்கு குறைவற்ற செல்வம் இருந்தாலும் நிறைந்த இன்பத்தில் வாழவேண்டும் என்பதை இப்பாடல் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

## அணிப்பொருத்தம்

இப்பாடலில் நீர்நிலைப் பூக்களில் உள்ள நிறைந்த தேனை உண்ணாமல் வண்டுகள் அதை விட்டு நீங்கி கூந்தலில் சூடியப் பூக்களில் உள்ள குறைவான தேனை விரும்பி செல்வதால் இது ஒட்டு அணியாகும்.

## முடிவுரை

அணிகள் செய்யுளின் பண்பு, நயம் ஆகிய வற்றை நுட்பமாக வெளிப்படுத்துகின்றன என்பதையும், செய்யுளில் பயின்றுவரும் அணிகள் செய்யுளின் உணர்ச்சிச் சிறப்பை யும் கற்பனைப் பெருமைகளையும் மறைக்கா மல் எடுத்துக்காட்டிச் செய்யுளின் பயனுக்கும் இன்பத்திற்கும் உறுதுணையாக நிற்கின்றன என்பதையும், ஒவ்வொரு அணி வகைக்கும் தெளிவான விளக்கமும் பொருத்த மானப் பாடல் சான்றும் அப்பாடலுக்குரிய பொருளும் அணிப் பொருத்தமும் இக்கட்டு ரையில் இடம்பெற்றுள்ளன என்பதையும் அறிய முடிகின்றது.

இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றானது சிலப்பதிகாரம். இந்நூல் முப்பது காதை களைக் கொண்டுள்ளது. அவற்றில் 120 இடங்களில் அளபெடைச் சொற்கள் இடம் பெற்றுள்ளன. இதில் உயிரளபெடையே முழுமையாக இடம்பெற்றுள்ளது. ஒற்றள பெடை இடம்பெறவில்லை. எனவே இக் கட்டுரையில் சொல்லிசை அளபெடையே மிகுதியாக இடம்பெற்றுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது. தன்மை அணியில் அளபெடை, தீவக அணி யில் அளபெடை, பின்வருநிலை அணியில் அளபெடை, முன்னவிலக்க அணியில் அள பெடை, வேற்றுப்பொருள் வைப்பு அணியில் அளபெடை, விபாவனை அணியில் அள பெடை, ஒட்டு அணியில் அளபெடை ஆகிய தலைப்புகளின் கீழ் அளபெடைச் சொற்களின் பயன்பாடுகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன. என்று விளக்கியுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியன், வே.ச.,(பதி.,ஆ), குவலயானந்தம், சந்திரலோகம், பக்.2.
2. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், பக்.39.
3. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பக்.26.
4. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், பக்.86.
5. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பக்.72.
6. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், பக்.95.
7. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பக்.274.
8. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், பக்.98.
9. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பக்.132.
10. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், பக்.110.
11. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பக்.61.
12. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், பக்.122.
13. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பக்.247.
14. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், பக்.126.
15. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பக்.30.

## துணைசெய்த நூல்கள்

1. சுப்பிரமணியன், வே.ச.,(பதி.,ஆ), குவலயா னந்தம், சந்திரலோகம், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை (1979)
2. தமிழண்ணல், தொல்காப்பியம், செல்லப்பா பதிப்பகம், மதுரை (2021)
3. திருஞானசம்பந்தம், முனைவர்.ச., தண்டியலங்காரம், கதிர் பதிப்பகம், திருவையாறு (2007)
4. புலியூர்க்கேசிகன், சிலப்பதிகாரம், பாரி நிலையம், சென்னை (2009)